# இருளில் ஒளி



## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

**WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599**

**Email: wordofgod@wordofgod.in**

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

**WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599**

**Email: wordofgod@wordofgod.in**

# இருளில் ஒளி

இறைவன், தெய்வம், பகவான், பரம்பொருள், ஈசன், கடவுள் என்று பல்வேறு வழிகளில் வர்ணிக்கப்படுகிற மெய்யான தேவனை அறிந்து கொள்ள மனவிருப்பத்துடன், வறண்டநிலம் (தண்ணீருக்கு) நீருக்கு ஏங்குவது போல ஏங்கி தவித்து இறுதியில் மெய்யான பரம் பொருளை கண்டு கொண்ட ஒரு பிரமாண குலத்தில் பிறந்து வளர்ந்த ஒரு வாலிபனின் உன்னத, அற்புதமான சாட்சியைக் காண்போம்.

'கடவுள்' என்றாலே 'கடந்து உள்ளே வருபவர்' என்று பொருள்படும். ஒரு மனிதனுடைய ஆத்துமாக்குள்ளாக வந்து தங்கி வாசம் செய்யும் இறைவனை அறிந்து கொள்ள பல் பிரயாசங்களை எடுத்துக் கொண்டேன். பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ளது. மேலும் வெளி 3:20ன்படி (இதோ, .... என் சத்தத்தை .... கதவைத்திறந்தால் (உள்ளத்தை), அவனிடத்தில் நான் பிரவேத்து (மெய்யாக கடவுள், இயேசுவே என்பதற்கு ஆதாரம்) மேலும், பல்வேறு அறிஞர்களின் வாக்கியங்களை கூர்ந்து கவனித்தேன். உதாரணங்கள் சிலவற்றை கீழே குறிப்பிட விரும்புகிறேன்.

வள்ளலார் கூறுகிறார் : 'அருட்பெருங் ஜோதி, தனிப்பெருங் கருணை' 'அருள்' நிறைந்தவராய், மிகவும் ஜெகஜோதியாக பிரகாசத்துடன் காணப்படும் தெய்வத்தை கண்டுக்கொள்ள கூடுமே என்கிற ஐயம் எனக்குள்ளாக தோன்றியது, மேலும் 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்கிற திருமூலரின் வார்த்தைகள் என்னை மிகவும் சிந்திக்க வைத்தது. ஏனெனில், நான் சிறுவனாய் இருந்த போது 'உலகிற்கு வெளிச்சம் தரக்கூடிய சூரியனை காண்பது கடினமாயிருக்கையில் ஜெகஜோதியாக மிகுந்த பிரகாசத்து டன் இருக்கும் ஒளிசுடரைக் காண்பது சாத்தியமோ என்று எண்ணினேன். 'சிருஷ்டிப்பை' பார்க்க முடியாத நான்

'சிருஷ்டிக்கரை' பார்க்க கூடுமோ என்கிற பல்வேறு சந்தேகங்களுடன் ஆன்மீக வாழ்வில் ஈடுபட்டேன். 'முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்' என்கிற முன்னோர்களின் வாக்கியத்தின்படி மெய்யான தேவனை கண்டுக்கொண்டேன்.

சத்திய வேதமாகிய பரிசுத்த வேதகாமத்தை அறிந்து கொண்டு ' இருள் நீங்கி ஒளி' பெற்றேன். காரணம் என்னவெனில், சங்கீதம் 104:2. 'ஒளியை வஸ்திரமாகத் தரித்து ...'' என்கிற வேத வசனத்தின்படியே 'நானே, இவ் உலகிற்கு ஒளியாய் இருக்கிறேன் என்கிற வசனத்தின்படி ஜெகஜோதியாய் 'பிரகாசத்துடன்' 'ஜீவ ஒளியான இயேசு என்னை மாற்றினார்.

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்.

என்னுடைய பெயர். இரா. மணி ஐயர். நான் பிராமண குலத்திலே பிறந்தவனும், தெய்வம் அல்லாதவைகளை வணங்கு வதில் வைராக்கியம் உள்ளவனாயும் இருந்தேன். வாரம் தவறா மல் மூன்று நாட்கள் விரதம் மேற்கொள்ளுவதும், வருடம் தவறாமல் சபரிமலைக்குச் செல்வதும் என் வழக்கமாயிருந்தது. காரணம் என்னவென்றால், கடவுளைக் காண வேண்டும், அவரோடு பேசவேண்டும் என்ற தீராத வாஞ்சைதான்.

"அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது, அவைகளுக்குக் கண்களிருந்து ம் காணாது" (சங்கீதம் 115:5) என்ற உண்மையை அப்பொழுது நான் உணரவில்லை. ஒழுங்காகக் கோவில்க ளுக்குச் சென்றேன். பூஜா ரியாகப் பணியாற்றினேன். அதோடு, இந்து முன்னணியின் தீவிரத் தொண்டனாக என் பக்தி வைராக்கியத்தை நிரூபித்தேன். யோகாசன பயிற்சிபெற்று, பிறருக்கும் அப்பயிற்சியளித்தேன்.

இந்நிலையில் என்னுடைய பதிமூன்றாவது வயதில், அதாவது, 1988 ஆம் ஆ ண்டில் ஒரு கிறிஸ்தவ நண்பர் மூலமாக

இயேசுவே மெய்யான தேவன், அவரையல்லாமல் வேறு தேவன் இல்லை என்ற உண்மைகளை அறிந்துகொண்டேன்". அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப் படவும் இல்லை" *(அப். 4:12)* என்று வேதம் கூறுகிறது.

வேத புத்தகத்தில் கூறப்பட்டுள்ள ஏசாயா போன்ற தீர்க்கதரிசி களின் வார்த்தைகள் பல நூற்றாண்டுகளுக்குப் பின் தோன்றிய இயேசுவின் வாழ்க்கையில் எழுத்தின்படியே நிறைவேறின என்று அறிந்த போது நான் அதிசயித்தேன்.

சிந்தனையின்றி, உட்பொருளை அறியாதவனாய் சமஸ்கிருத மொழி யில் பல மந்திரங்களைக் கூறுவது என் வழக்கமாக இருந்தது. இயேசுவைப் பற்றிக் கேள்வியுற்ற பின்னர் அவரை நான் வணங்கிய தெய்வங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் நோக்கத்தோடு அம்மந்திரங்களின் தமிழாக்கத்தைக் கூர்ந்து கவனித்தேன். அவற்றுள் சிலவற்றை இங்குக் குறிப்பிட விரும்புகின்றேன்.

1. **மூல மந்திரம் :**

   **ஓம் பிரம்மபுத்திராய நமக!**

   *விளக்கம் :* பிதாவின் (பிரம்மா) குமாரனாகிய இயேசுவே (புத்திராய) உம்மை வணங்குகிறேன் (நமக)

2. **இயேசுவின் பிறப்பு :**

   **ஓம் கன்னிகத்தாய நமக!**

   *விளக்கம் :* கன்னியின் வயிற்றில் பிறந்தவரே, உம்மை வணங்குகிறேன். (இயேசு கன்னி மரியாளின் வயிற்றில் பிறந்தார்)

3. **இயேசுவின் சிலுவைப் பாடுகள் :**

   i. **ஓம் பஞ்சகாய நமக!**

   *விளக்கம் :* ஐந்து காயங்கள் (பஞ்ச காய) உடையவரே, உம்மை வணங்குகிறேன்.

**இயேசுவின் சிலுவைப் பாடுகள் :**

**ii. ஓம் விருச்சசூல அருந்தா்ய நமக! (1 பேதுரு 2:24)**

சிலுவை மரத்தில் தொங்கினவரே உம்மை வணங்குகிறேன்.

**4. இயேசு ஒருவரே மரணத்தை வென்றவர் :**

**ஓம் ம்ருதம் ஜெயாய நமக!**

மரணத்தை வென்றவரே உம்மை வணங்குகிறேன்.

மாறாத தன்மை கொண்ட தெய்வம் இயேசு ஒருவரே என்பதற்கு ஆதாரம்.

**i. ஓம் நமச்சிவாயா நமக!**

விளக்கம் : 'அன்புள்ளவனே உம்மை வணங்குகிறேன். 'சிவம்' என்றால் 'அன்பு' என்று பொருள்படும்.

**ii. ஓம் ஸதாசிவாயா நமக!**

விளக்கம் : எப்பொழுதும் அன்புள்ளவனே உம்மை வணங்குகிறேன். ஸதா என்றால் எப்பொழுதும் (Forever) என்று பொருள்படும். வேதம் கூறுகிறது. 'இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாத வராயிருக்கிறார்" (எபிரே 13:8)

இயேசுவே மெய்தெய்வம் என்ற உண்மையை நான் கூறும் மந்திரங்களே திட்டவட்டமாக அறிவிக்கின்றன என்று நான் புரிந்து கொண்டபோது ஒருவித நடுக்கமும் பயமும் என்னைப் ஆட்கொண்டது. இந்து நண்பர்களோடு சேர்ந்து கிறிஸ்தவர்களுக்கு விரோதமாய்ச் செய்த பிரச்சாரங்களை முழுவதுமாக விட்டுவிட்டேன்.

இந்தியரை அடிமைப்படுத்துவதற்கென்ற மேல்நாட்டினர் இந்திய மண்ணில் புகுத்திய அந்நிய தெய்வம் தான் இயேசு என்ற எண்ணம் என் உள்ளத்தை விட்டு அகன்றது. இந்திய

தேசத்தில் பிறந்த பக்தர்களே அவரைக் குறித்து முன்னறிவித்தனர் என்றும், சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பே கிறிஸ்துவின் சுவிசேஷம் இயேசுவின் சீஷனாகிய தோமாவின் மூலம் இந்தியாவிற்கு வந்தது என்றும் அறிந்தபோது இயேசுவை என் இதய தெய்வமாகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ளத் தீர்மானித்தேன்.

இயேசுவின் வாழ்க்கையை நான் வணங்கிய தெய்வங்களின் வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்த்தபோது இயேசுவே குறையற்ற பரிசுத்தர் என்ற உண்மை புலனாயிற்று. இயேசுவை எனக்கு அறிமுகப்படுத்திய நண்பரின் வாழ்க்கையை என்னோடு உழைத்த இந்து முன்னணி தொண்டர்களின் வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்த்தேன். அந்தக் கிறிஸ்தவரது வாழ்க்கையும் என்னை வியப்புக்குள் ஆழ்த்தியது. வாலிபப் பருவத்திலேயே இத்தகைய பரிசுத்தத்தோடு வாழமுடியுமானால் அத்தகைய வாழ்க்கை தான் எனக்குத் தேவை என்ற முடிவுக்கு வந்தேன். அவர் கூறியபடியே, "இயேசுவே, என்னை மன்னியும். என் உள்ளத்தில் வாரும்" என்று ஜெபித்தேன். அற்புதம் நிகழ்ந்தது. இயேசு என் உள்ளத்தை அன்பினால் நிரப்பினார். பிறரிடம் எனக்கு இருந்த வெறுப்பு உணர்ச்சிகள், பொறாமை, இச்சை போன்ற இருதயத்தில் மறைந்திருந்த அசுத்தங்கள் படிப்படியாக என்னை விட்டு நீங்குவதை உணர்ந்தேன்.

என் கிறிஸ்தவ நண்பர் கூறியபடியே பரிசுத்த வேதாகமத்தை வாசித்தேன். என் பிரச்சினைகளை இயேசுவின் பாதத்தில் வைத்து ஜெபித்தேன். அப்பொழுது இயேசு எனக்குப் பல வெற்றிகளைத் தந்தார்.

வேத கட்டளையின்படியே தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டேன். ஒருநாள் நான் ஜெபித்துக் கொண்டிருந்தபோது இயேசு கிறிஸ்து என்னைப் பரிசுத்த ஆவியினால் நிரப்பினார். பலவித போராட்டங்களும்

குழப்பங்களும் நிறைந்த என் உள்ளத்தில் உலகம் தரக்கூடாத சமாதானம் உதயமாயிற்று. மாய்மாலம், அசுத்த சிந்தை போன்ற தீமைகள் மீதும் இயேசு எனக்கு வெற்றியைத் தந்தார்.

இவ்விதமாய் நான் இயேசுவை என் வீட்டார் அறியாவண்ணம் மறைமுகமாய், ஆனால் உறுதியாய்ப் பற்றிக்கொண்டு ஒரு ஆவிக்குரிய சபையிலே ஐக்கியம் வைத்துக்கொண்டேன். இச்சபையின் போதனைகள் என் ஆவிக்குரிய முன்னேற்றத்திற்கும் வல்லமைக்கும் காரணமாக அமைந்தன.

நான் சிறுவனாக இருந்தபோது எத்தனையோ ஆலயங்களுக்குச் சென்றிருக்கிறேன். விக்கிரகங்களை வணங்கியிருக்கிறேன். பக்தியின் வேஷத்தைத் தரித்திருந்தாலும் என் இயற்கை குணம் மாறவில்லை. சினிமா போன்றவற்றை நாடினேன். என் இருதயம் அசுத்த சிந்தனைகளால் நிறைந்திருந்தது. அவற்றின்மேல் எனக்கு 'வெற்றியில்லை. இயேசுவின் போதனைகளைக் கேட்டபோதோ பரிசுத்த ஆவியானவர் என் உள்ளத்தில் கிரியை செய்தார். என் உள்ளத்தை அவர் பரிசுத்தப்படுத்தினார்.

1992 ஆம் ஆண்டு என் வாழ்க்கையின் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. நான் இயேசுவைப் பின்பற்றுவது என் இனத்தாருக்குத் தெரியவந்தது. ஒரு கூட்டத்தார் எனக்கு விரோதமாய் எழும்பினர். ஒருநாள் அவர்கள் என் சரீரம் முழுவதும் மண்ணெண்ணெயை ஊற்றிவிட்டு இயேசுவை மறுதலிக்கும்படி வற்புறுத்தினார்கள். அவ்வாறு செய்யாவிட்டால் என்னை உயிரோடு எரித்துவிடுவதாகக் கூறினார்கள். ஏசாயா 53:7இல், அவர் (இயேசு) தம்முடைய வாயைத் திறவாதிருந்தார் என்று வாசிக்கிறோம். இயேசுவைப் போலவே நானும் மறுஉத்தரவு கூறாமல் மவுனமாய், கர்த்தருக்குள் ஆவியானவர் ஏவினபடியே, இன்று மரித்தாலும் இயேசுவுக்காய் மரிப்பேன் என்ற தீர்மானத்தை எடுத்துக்

கொண்டேன். அந்த வேளையில் நான் ஒரு தரிசனத்தைக் கண்டேன். தானியேல் 3:25இல் கூறியிருப்பதுபோல் அக்கினி சூளையில் இருந்த மூவரோடு தேவகுமாரன் உலாவின வண்ணம் என்னோடு இயேசு நிற்பதைக் கண்டேன். எத்தீங்கும் எனக்கு நேராதபடி இயேசு என்னைப் பாதுகாத்தார்.

எனக்குத் தீங்கு விளைவிக்க வந்தவர்கள் என்னைக் கண்டு அஞ்சினர். "உன்னிடத்தில் ஏதோ ஒரு வல்லமை இருக்கிறது" என்று கூறிவிட்டு, என்னைத் தனியே விட்டுச் சென்றனர். அடுத்த சில நாட்களில் தேவன் என்னை வேறுபிரித்த நோக்கத்தைத் தெரியப்படுத்தி, ஒரு சுவிசேஷகனாகப் பணியாற்றும்படி கட்டளையிட்டார்.

தேவனுடைய கிருபையினால் பல கிராமங்களிலும் நகரங்களிலும் சுவிசேஷத்தை அறிவிக்கையில், அநேகர் மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக்கொண்துடன், ஆவியான வரின் அபிஷேகத்தையும் அற்புத சுகத்தையும் பெற்றுக் கொண்டனர். இதன் மூலம் தேவன் என் ஊழியத்தை ஸ்திரப்படுத்தினார்.

இருபத்திரண்டு ஆண்டுகளாக நடக்கமுடியாத நிலையில் இருந்த ஒரு வாலிபனுக்காக என்னை ஜெபிக்கும்படி அழைத்தனர். பரிசுத்த ஆவியானவர் அவனுடைய சுகத்திற்காக ஜெபிக்க ஒரு ஏவுதலைக் கொடுத்தார். கோணலாக இருந்த அவன் கால்களில் எண்ணெய் பூசி அவனுக்காக ஜெபித்தபின், இயேசுவின் நாமத்தில் எழுந்து நடக்கும்படி கட்டளை கொடுத்தேன். அவன் நடப்பதைக் கண்ட அவன் பெற்றோரும் நண்பர்களும் இயேசுவைத் துதித்தனர். இயேசுவின் நாமத்தைத் தூஷித்த என்னையும் தேவன் பயன்படுத்துகிறார் என்பதைக் கண்டு நானும் அவர்களோடு சேர்ந்து அவரைத் துதித்தேன்.

இவ்விதமாக இந்நாள்வரை பல இடங்களுக்குச் சென்று முழுநேர சுவிசேஷகனாக, இயேசுவின் திருப்பணியை,

திருச்சபையின் வளர்ச்சிக்காகவும் ஆத்துமாக்களின் மீட்புக்காகவும் தேவநாம மகிமைக்காகவும் தேவசித்தத்தின் படி செய்துவருகிறேன். இச்சாட்சியின் மூலம் வரும் துதி, கனம், மகிமை அனைத்தையும் தேவனுக்கே செலுத்துகிறேன். அல்லேலூயா!

இரா. மணி அய்யர்
சென்னை - 78.

பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும் சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப் 1:8).

இப்படியாக, எல்லா கோணங்களிலும் ஆராய்ந்து, மெய்யான தெய்வமான இயேசுவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு இயேசுவின் விருப்பத்தின்படியே அவருடைய திருப்பணியைச் செய்து வருகிறார் 'மணி ஐயர்'

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :**

சகோ. மணிஐயர்
2/5, இராணி அண்ணா நகர்,
கே.கே. நகர், சென்னை – 600 078.
தொலைபேசி எண் : 4818070
E-mail :
MANIIYER 23@hotmail-com
Visit our Website :
http:11personal.vsnl.com/evangelist

முதலாம் பதிப்பு : ஜுன் 1999

இரண்டாம் பதிப்பு : அக்டோபர் 1999

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**

சகோ. மணி ஐயர்

2/5, இராணி அண்ணா நகர்,

கே.கே. நகர், சென்னை – 600 078.

தொலைபேசி எண் : 4811858

*E-mail : MANIIYER23@hotmail.com*

*Visit our Website : http://personal.vsnl.com/evangelist*

Omega Press, Pager No. : 9628465326